بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 24/12/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 4

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்யும் பொழுது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உடனிருந்தது தொடர்பாகவும் கூறப்பட்டுள்ளது. மக்காவில் வசித்த முஸ்லிம்கள் மீது மக்கத்து காஃபிர்கள் செய்யும் அநீதியும் கொடுமையும் தொடர்ச்சியாக அதிகமாகிக் கொண்டே இருந்தது. இந்த காலகட்டத்திலேயே பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஒரு கனவில் இரண்டு முஸ்லிம்களுக்குத் தரிசு நிலமான, பேரித்த மரங்களால் நிறைந்த ஓர் இடத்தில் ஹிஜ்ரத் செய்வதாகக் காட்டப்பட்டது. அதன் புவியியல் அமைப்பையும் வரைபடத்தையும் பார்த்து பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த இடம் யமாமா அல்லது ஹஜர் ஆகும் என்று விளக்கம் தந்தார்கள். சிறிது காலத்திற்குப் பிறகு மதீனாவைச் சார்ந்த நற்பேறு பெற்ற அன்ஸார் பெருமக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தார்கள். அப்போது அந்த இடம், பிற்காலத்தில் மதீனா என்ற பெயரில் புகழ் பெற இருந்த யஸ்ரப் ஆகும் என்பது இறையறிவிப்பின் மூலம் பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் புலப்பட்டது.

மக்காவின் முஸ்லிம்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் அனுமதியைப் பெற்று மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்ய ஆரம்பித்தார்கள். இரண்டாம் பைஅத் உக்பாவிற்கு பிறகு இந்த ஹிஜ்ரத் துரிதமானது. மக்காவின் அநியாயக்கார தலைவர்கள் ஆத்திரத்தில் பொங்கினார்கள். முஸ்லிம்கள் மீது கொடுமையும், அநீதியும் செய்வதற்கான புத்தம் புது வழிகளைக் கையாள ஆரம்பித்தனர். ஆனால் பொறுமையும், நன்றியும் செலுத்தக்கூடிய முஃமின்களுடைய ஜமாஅத்தில் எவர்களால் இயன்றதோ அவர்கள் மதீனாவை நோக்கி தொடர்ச்சியாக ஹிஜ்ரத் செய்துகொண்டே இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களோ இறைவனுடைய கட்டளைக்காகக் காத்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹிஜ்ரத் செய்வதற்காக அனுமதி கோரிய போது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: عَلٰى رِسْلِكَ فَاِنِّیْ اَرْجُوْا اَنْ یُّؤْذَنَ لِیْ அதாவது, எனக்கு அனுமதி கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். ஆகையால் சிறிது காத்திருக்கவும். இறுதியாக மக்காவில் பெருமானார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மற்றும் சில அடிமைகள் மட்டுமே எஞ்சியிருந்தார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** மக்காவின் காஃபிர்களுக்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்குச் சென்று விடுவார்களோ என்ற அச்சம் ஏற்பட்ட பொழுது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக மறைமுகமான திட்டம் தீட்டுவதற்காக கஸ்ஸி பின் கலாபின் வீடான 'தாருன்

நத்வா’ வில் கூடினர். இந்த நாள் யவ்முஸ் ஸஹ்மா எனப்படுகிறது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் குறைஷிகளின் பிரபலமான தலைவர்களின் ஒரு பெரும் கூட்டம் மட்டுமல்லாமல், குறைஷிகளைச் சாராத சில தலைவர்களும் இருந்தனர். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராகப் பல்வேறு விதமான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. ஒரே இடத்தில் பூட்டி வைக்க வேண்டும். அல்லது நாடுகடத்த வேண்டும் போன்றவை. ஆனால், அபூஜஹ்ல் இவ்வாறு ஆலோசனை வழங்கினான்: குறைஷிகளின் ஒவ்வொரு கோத்திரத்தில் இருந்தும் வலுவான, உயர்க் குடும்பத்தைச் சார்ந்த இளைஞனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த மக்கள் முஹம்மது (ஸல்) அவர்களைக் கொலை செய்ய வேண்டும். இவ்வாறு, அவருடைய கொலைப்பழி அனைத்துக் கோத்திரத்தின் மீதும் பங்கிடப்பட்டு விடும். பனூ அப்தே முனாஃப் எல்லாக் கோத்திரத்திடமும் சண்டையிட முடியாது. ஈட்டுத் தொகையைப் பெறுவதற்கு ஒப்புக்கொள்வார்கள்.

இதற்கு போர்வை போர்த்தி இருந்த ஒரு முதியவர் - இப்லீஸின் பண்பை கொண்ட மனிதர், அவரை யாரும் அறிந்ததில்லை. அவர், ‘நான் நஜத் வாசி ஆவேன். உங்களுடைய பயனுக்காக வந்துள்ளேன்’ என்றார். அவர் அபூஜஹ்லுடைய ஆலோசனையை முழுமையாக வரவேற்றார். அதனை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். மறுபுறம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் இந்த அனைத்து விஷயங்கள் தொடர்பாகவும் தெரியப்படுத்தி விட்டான். ஜிப்ராயீல் மூலமாக ஹிஜ்ரத் செய்வதற்கான அனுமதி வழங்கினான். அத்துடனேயே வெற்றி மற்றும் உதவியுடன் மக்கா திரும்பி வருவது குறித்து நற்செய்தியையும் வழங்கினான்.

ஹிஜ்ரத் செய்வதற்கான அனுமதி கிடைத்தவுடன் பெருமானார் (ஸல்) அவர்கள் சுடும் வெயிலில் மதிய வேளையில் முழு முன்னெச்சரிக்கையை மேற்கொண்டு யாரும் அறிந்திடாமல் இருக்க போர்வையை அணிந்து கொண்டு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் வீட்டிற்குச் சென்றார்கள். எனக்கு அல்லாஹ்விடமிருந்து ஹிஜ்ரத் செய்வதற்கான அனுமதி கிடைத்துவிட்டது என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் வினவினார்கள்: யா ரஸூலல்லாஹ்! என்னையும் உடன் அழைத்துச் செல்வீர்களா? பெருமானார் (ஸல்) அவர்கள் ஆமாம் என்று பதிலளித்தார்கள். ஹிஜ்ரத் பயணம் தொடர்பாக முன்பே சுட்டிக்காட்டப்பட்டிருந்த காரணத்தினால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில் 800 திர்ஹமிற்கு இரண்டு ஒட்டகங்களை முன்னரே வாங்கி வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவற்றில் ஒன்றை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கொடுத்த போது பெருமானார் (ஸல்) அவர்கள் இலவசமாக வாங்க மறுத்து விடாப்பிடியாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அதற்கான தொகையை கொடுத்து அவரிடமிருந்து ஓர் ஒட்டகத்தை நானூறு திர்ஹமிற்கு வாங்கிக் கொண்டார்கள். வேறு ஓர் அறிவிப்பின் அடிப்படையில், 800 திர்ஹமிற்கு வாங்கிக் கொண்டார்கள்.

ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி முதல் இருப்பிடமாக சௌர் குகை நிர்ணயிக்கப்பட்டது. அங்கு மூன்று நாள்கள் தங்க வேண்டும் என்பதாகும். மக்கா நகருக்குச் சுற்றுவட்டாரத்தில் உள்ள அனைத்து பாலைவன வழிகளையும் அறிந்த ஓர் இணை வைப்பாளர், ஆனால் நல்லியல்பு கொண்ட நபராகிய அப்துல்லாஹ் பின் அரீக்கத் அவர்களிடம் மூன்று ஒட்டகங்கள் ஒப்படைக்கப்பட்டன. அவர் மூன்று நாள்களுக்குப் பிறகு விடியற்காலையில் சௌர் குகைக்கு அழைத்து வர வேண்டும். இந்த நபர் பிற்காலத்தில் முஸ்லிம் ஆகிவிட்டார். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீபக்ர் (ரலி) அவர்களுக்கு தினமும் மக்காவின் நிலை என்ன என்பது தொடர்பாக

இரவில் ஸௌர் குகைக்கு வந்து தெரியப்படுத்த வேண்டும் என்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின், புத்திக் கூர்மையும் பொறுப்பும் கொண்ட அடிமையுமான ஆமிர் பின் ஃபுஹைரா தம்முடைய ஆடுகளை ஸௌர் குகைக்கு அருகில் மேய்க்க வேண்டும். அந்த ஆடுகளின் பாலை இரவில் கொண்டு வந்து கொடுக்க வேண்டும். பெருமானார் (ஸல்) அவர்களுடைய அருளுக்குரிய படுக்கையில் பெருமானார் (ஸல்) அவர்களுடைய மஞ்சள் நிற அல்லது வேறு அறிவிப்பின் அடிப்படையில் சிவப்பு நிற ஹஸ்ரமி போர்வையைப் போர்த்திக் கொண்டு இரவில் படுக்க வேண்டும் என்ற பணி ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் பொது மக்கள் வைத்திருந்த அமானிதங்களைத் திருப்பி தந்த பிறகு 3 நாள்களுக்குப் பிறகு மதீனா வந்தடையுமாறு வழிகாட்டல் வழங்கப்பட்டது.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் பயணம் செய்வதற்காக வீட்டில் இருந்து புறப்பட்ட சரியான நேரம் குறித்து பல்வேறு விதமான அறிவிப்புகள் கிடைக்கின்றன. எவ்வாறு இருப்பினும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்றின் அடிப்படையில் பெருமானார் (ஸல்) அவர்கள் காலையில் வீட்டில் இருந்து புறப்பட்டார்கள். எதிரிகள் வீட்டை முற்றுகையிட்டு இருந்தும் எந்த எதிரியும் பெருமானார் (ஸல்) அவர்களைப் பார்க்கவில்லை. அல்லாஹ் ஸூரா யாஸீனில் கூறியதற்கு ஏற்றவாறு அனைத்து எதிரிகளுடைய கண்களிலும் திரையிடப்பட்டு விட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் எதிரிகளுடைய கண்களில் மண்ணைத்தூவி விட்டு சென்று விட்டார்கள். அதாவது அவர்களுடைய திட்டங்கள் சுக்கு நூறாகி விட்டது. இதேபோன்று பெருமானார் (ஸல்) அவர்கள் வீட்டிலிருந்து புறப்பட்ட பிறகு எந்தப் பக்கமாகச் சென்றார்கள் என்பது தொடர்பாகவும் மிகச் சரியான, நம்பத்தகுந்த விஷயம் என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடைய வீட்டிலிருந்து புறப்பட்டு நேராக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிற்குச் சென்றார்கள். அங்கிருந்து அவர்களுடன் ஸௌர் குகைக்கு செல்ல ஆரம்பித்தார்கள். ஹிஜ்ரத்தின் பயண உணவிற்காக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தமது அறிவாற்றலின் மூலமாக இருவருக்கான உணவை ஒரு தோல் பையில் வைத்து விட்டார்கள். தோல் பை(யின் வா)யை மூடுவதற்காக ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் தம்முடைய நதாக் அதாவது இடுப்புத் துணியிலிருந்து ஒரு பகுதியைக் கிழித்து அந்தப் பை(யின் வா)யை கட்டினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அஸ்மாவே! அல்லாஹ் உமக்கு இந்த நதாக்குக்குப் பகரமாக சொர்க்கத்தில் இரண்டு நதாக் வழங்குவானாக என்று கூறினார்கள். இதற்குப் பிறகு ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் எப்போதும் ஸாதுன் நதாக் - கச்சுடையாள் என்று அழைக்கப்பட்டார்கள்.

ஹிஜ்ரத் பயணத்தின் பொழுது பெருமானார் (ஸல்) இந்த வசனத்தை ஓதிக் கொண்டே சென்றார்கள்:

وَقُلْ رَّبِّ اَدْخِلْنِیْ مُدْخَلَ صِدْقٍ وَّاَخْرِجْنِیْ مُخْرَجَ صِدْقٍ وَّاجْعَلْ لِّیْ مِنْ لَّدُنْكَ سُلْطٰنًا نَّصِیْرًا ﴿۸۱﴾

நீர் கூறுவீராக: என் இறைவா! என்னை (மீண்டும் மக்காவிற்குள்) நல்ல முறையில் நுழையச் செய்வாயாக. நற்பெயரை விட்டுச் செல்லும் முறையில் (மக்காவிலிருந்து) என்னை வெளியேறச் செய்வாயாக. மேலும் உன்னிடமிருந்து எனக்கு உதவியாளராகவும் சாட்சியாகவும் விளங்கும் ஒருவரை நியமிப்பாயாக.

ஷரஹ் ஸர்கானியில் ஒரு துஆவும் வருகின்றது. கஅபாவின் பின்பக்கத்திலிருந்து கடந்து செல்லும் பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள்

மக்காவின் பக்கம் தம்முடைய அருளுக்குரிய முகத்தைத் திருப்பியவாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் மீதாணையாக! மக்கா நகரமே அல்லாஹ்வின் பூமியில் எனக்கும் அல்லாஹ்வுக்கும் நீ மிகவும் நேசத்திற்குரியதாவாய். உன்னில் வசிப்பவர்கள் வலுக்கட்டாயமாக என்னை வெளியேற்றவில்லை என்றால் நான் ஒருபோதும் வெளியேறி இருக்க மாட்டேன்.

**இமாம் பைஹகீ எழுதுகிறார்கள்:** பெருமானார் (ஸல்) அவர்கள் பாதுகாப்புடன் இருக்கவேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சௌர் குகைக்கு செல்லும் பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்பும் பின்பும் வலப்புறமும் இடப்புறமும் செல்வார்கள். ஓர் அறிவிப்புக்கு ஏற்ப அந்த மலை பயணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருள்நிறைந்த பாதங்களிலும் காயம் ஏற்பட்டது. சௌர் குகைக்குச் சென்றவுடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆபத்து எதுவும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக முதலில் தாம் உள்ளே சென்றார்கள். குகையை நன்கு சுத்தம் செய்தார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உள்ளே வருகை தர அழைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மடியில் தலை வைத்து படுத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் குகையில் இருந்த ஒரு பொந்தை தம்முடைய பாதத்தால் மறைத்து வைத்து இருந்தார்கள். அதிலிருந்து தேள் அல்லது பாம்பு அவர்களை கொட்டிக் கொண்டே இருந்தது. ஆனால் அவர்கள் சற்றும் அசையவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கண்விழித்து பார்த்த பொழுது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் முகம் மாறி இருப்பதை பார்த்து என்ன நடந்தது என்று வினவினார்கள். தமது அருள் நிறைந்த உமிழ்நீரை அங்கு தடவினார்கள். அதன் பிறகு அந்தப் பாதம் எந்த பாதிப்பும் ஏற்படாது போல் ஆகிவிட்டது.

மக்கத்து காஃபிர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் படுக்கையில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் உறங்கிக் கொண்டிருந்தது தெரிந்ததும் அவர்களை சிறிது அடித்த பிறகு விட்டுவிட்டனர். பிறகு ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்களிடம் விசாரித்தனர். அந்த தருணத்தில் அபூஜஹ்ல் அன்னாரின் முகத்தில் அறைந்தான். இதனால் அன்னாருடைய கம்மல் உடைந்து விட்டது. இறுதியாக மக்காவின் ஒரு தலைவனான உமையா பின் கல்ஃப் தானே ஒரு திறமையான தேடும் பணி செய்யும் அல்கமா பின் கஸரை அழைத்துக் கொண்டு தன்னுடைய கூட்டாளிகளுடன் சரியாக சௌர் குகையின் முன்னால் வரை சென்று விட்டான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அவர்களின் கால்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். யாராவது ஒருவர் உள்ளே எட்டிப்பார்த்திருந்தார் என்றாலும் நாங்கள் பிடிபட்டு இருப்போம். ஆனால் ஆபத்தான இந்தப் பொழுதில் அற்புதமான இறைவனுடைய வல்லமை மூலமாக ஒரு சிலந்தி குகையின் நுழைவு வாயிலில் வலையை பின்னியது. ஒரு ஜோடி புறா கூடு கட்டி முட்டையிட்டது. இதன் பிறகுள்ள சம்பவங்கள் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் காலத்தில் எடுத்துரைக்கப்படும்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ

لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللهِ رحمكم الله اِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ

وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி எம். ஷஹாபுதீன்)